# இஸ்ரவேலுடன் தேவனுடைய உடன்படிக்கை

*பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த வார்த்தைகளை நீ எழுது; இந்த வார்த்தைகளின்படியே உன்னோடும் இஸ்ரவேலோடும் உடன்படிக்கைபண்ணினேன் என்றார். அங்கே அவன் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இரவும் பகலும் நாற்பதுநாள் கர்த்தரோடே இருந்தான்; அவன் பத்துக்கற்பனைகளாகிய உடன் படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளில் எழுதினான் (யாத். 34:27, 28).*

தேவன் தம்முடைய மக்களான இஸ்ரவேலருடன் ஏற்படுத்திய உடன்படிக்கையானது பழைய ஏற்பாட்டின் முக்கிய உடன்படிக்கைகளில் ஒன்று ஆகும். ஆபிரகாமுக்கு ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தமானது இயேசுவுக்குள் நிறைவேற்றப்படக் கூடும் வரைக்கும் (கலா. 3:17-19) தேவனைப் பற்றிய அறிவைப் பாதுகாப்பதற்காக இந்த உடன்படிக்கை ஏற்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

தேவன் (முன்பு ''மேன்மையான தகப்பன்'' என்று அர்த்தப்படும் ஆபிராம் என்று இருந்த) பெயரை "ஜாதிகளின் தகப்பன்" என்று அவரது பணிப் பொறுப்பைப் பிரதிபலிக்கும்படி ஆபிரகாம் என்று மாற்றினார் (ஆதி. 17:2-5; 22:17). அவருடைய சந்ததியார் திரளாய்ப் பெருகுவார்கள் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்தார். இந்த வாக்குத்தத்தத்தைத் தேவன் ஆபிரகாமின் மகனான ஈசாக்குக்கும் (ஆதி. 26:4) மற்றும் இஸ்ரவேல் என்று பெயர் மாற்றப்பட்ட பேரன் யாக்கோபுக்கும் (ஆதி. 28:14; 32:28) மீண்டும் ஏற்படுத்தினார்.

## இந்த உடன்படிக்கையின் பின்னணி

இஸ்ரவேல் மக்களுடன் உடன்படிக்கையை நிலைநாட்ட வழிநடத்திய நிகழ்ச்சிகளில் யாக்கோபின் கடைசி மகனுக்கு மூத்தவரான யோசேப்பு தம் சகோதரர்களால் விற்கப்பட்டு எகிப்தில் ஒரு அடிமையாக ஆனதும் உள்ளடங்கிற்று. அவர் தம் எஜமானரின் மனைவியைக் கற்பழிக்க முயன்றதாகத் தவறாகக் குற்றம் சாட்டப்பட்டபிறகு சிறையில் அடைக்கப்பட்டார். ஏழு ஆண்டுகள் செழுமை மற்றும் அதைத் தொடர்ந்த ஏழு ஆண்டுகள் வறுமை பற்றிய பார்வோனின் கனவுகளுக்கு யோசேப்பு அர்த்தம் கூறிய பிறகு அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு எகிப்தின் இரண்டாம் அதிகாரியாக ஏற்படுத்தப்பட்டார். எகிப்து முழுவதிலும்

*பஞ்சம் பரவி, அது கானானிலும் வந்தபொழுது, யாக்கோபு தமது பத்து மகன்களைத் தானியம் வாங்கும்படியாக எகிப்திற்கு அனுப்பினார். யோசேப்பு தம்மைத் தமது சகோதரர்கள் அறியும்படி செய்த பிறகு, பஞ்சத்தின் காலம் மற்றும் கொடுமை ஆகியவற்றின் காரணமாக தமது தந்தையை எகிப்துக்கு வரும்படி அழைத்தனுப்பினார். யாக்கோபு எகிப்துக்குச் செல்ல வேண்டும் என்று உறுதிப்படுத்துவதற்காகத் தேவன் அவருக்குத் தரிசனமானார். அவர், "... நீ எகிப்து தேசத்துக்குப் போகப் பயப்பட வேண்டாம், அங்கே உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன்" (ஆதி. 46:3) என்று கூறினார். யாக்கோபு தம் மனைவிகளையும், தம் மகன் களையும், அவர்களது மனைவிகள் மற்றும் பிள்ளைகளையும் - மொத்தம் எழுபது பேர்களை - அழைத்துக் கொண்டு எகிப்துக்குச் சென்றார் (யாத். 1:1-5). அவர்களின் எண்ணிக்கை விரைவில் பெருகி வளர்ந்தது: "இஸ்ரவேல் புத்திரர் மிகுதியும் பலுகி, ஏராளமாய்ப் பெருகிப் பலத்திருந்தார்கள்; தேசம் அவர்களால் நிறைந்திருந்தது" (யாத். 1:7).*

*மக்கள் எகிப்தில் பிரவேசித்து நானூறு ஆண்டுகளுக்குப் பிறகு, மற்றும் அடிமைத்தனத்தின் ஆண்டுகள் பலவற்றைத் தொடர்ந்து, மோசே தேவனு டைய மக்களை எகிப்திலிருந்து வெளியே வழி நடத்தினார். தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்தபடி (ஆதி. 12:2), ஆபிரகாமின் சந்ததியானது ஒரு மாபெரும் இனமாக வளர்ந்திருந்தது. இந்த அடிமை மக்கள் தொகையானது இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத் தக்கவர்களாகிய ஆண்கள் (எண். 1:45, 46) 6,05,550 பேர்களையும் இஸ்ரவேலரின் மத நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாளர்களாக வைக்கப்பட்டிருந்த (எண். 1:50-53) லேவி இனத்தைச் சேர்ந்த ஆண்கள் (எண். 3:39) 22,000 பேர்களையும் கொண்டிருந்தது.*

*ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரின் இந்தச் சந்ததியார் எகிப்தை விட்டுப் புறப்பட்டு, சீனாய் மலைக்கு வந்தனர் (யாத். 19:23; 20:1-17), அம்மலை ஓரேப் என்றும் அழைக்கப்பட்டது (உபா. 5:2), அங்கு தேவன் அவர்களுக்கு தேசிய சட்டம் ஒன்றைக் கொடுத்தார். இந்த சட்டத்தைக் குறித்து மோசே, "நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறது போல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங் களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது?" என்று கேட்டார் (உபா. 4:7, 8).*

## இந்த உடன்படிக்கையின் அமைப்பு

*நியாயப்பிரமாணத்தில் கர்த்தருடைய கட்டளைகள் என்று கருதப்பட்ட சட்டங்களும், நியாயத்தீர்ப்புகளும் மற்றும் ஆணைகளும் (உபா. 4:7, 45; 5:1) உள்ளடக்கப்பட்டிருந்தன. மோசே, "நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள்*

*கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்" (உபா. 4:2) என்று கூறினார்.*

*இந்த உடன்படிக்கையானது ''உடன்படிக்கையின் புத்தகம்'' (யாத். 24:7), "உடன்படிக்கையின் இரத்தம்" (யாத். 24:8), மற்றும் "உடன் படிக்கையின் கற்பலகைகள்" (உபா. 9:11) என்ற சொற்றொடர்களினால் குறிப்பிடப்பட்டது. பத்து கட்டளைகள் இரண்டு கற்பலகைகளில் எழுதப்பட்டுப் பேழையில் வைக்கப்பட்டதால் (உபா. 10:4, 5) நாம் உடன் படிக்கையின் பேழை பற்றியும் கூட வாசிக்கின்றோம் (எண். 10:33; 14:44; உபா. 10:8).*

*உடன்படிக்கையானது "சாட்சியம்" என்றும் குறிப்பிடப்படுகின்றது (யாத். 27:21; 31:18; 32:15; 34:29; 40:20). இந்தக் காரணத்தினாலேயே நாம் பின்வரும் கூடுதல் விளக்கங்களைக் காண்கின்றோம்: "சாட்சிப் பெட்டி" (யாத். 25:16, 21, 22), "கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகள்" (யாத். 31:18), ''சாட்சியத்தின் கூடாரம்'' (யாத். 38:21; எண். 1:50; 2 நாளா. 24:6), "சாட்சிப் பெட்டியின் மேலிருக்கிற கிருபாசனம்" (லேவி. 16:13) மற்றும் "சாட்சி சந்நிதியின் திரை" (லேவி. 24:3). பெயர் குறிப்பிடும் இந்த முறைமையானது பழைய ஏற்பாடு (சாட்சி) என்று அழைக்கப்படும் யூதருடைய வேத வசனங்கள் மற்றும் புதிய ஏற்பாடு என்ற கிறிஸ்தவரின் வேத வசனங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாயிருக்கலாம்.*

*யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனதற்குச் சிறிது காலம் முன்னதாக யோசியாவால் சீர்திருத்தங்கள் செய்யப்பட்ட காலத்தின் போது (2 நாளா. 35:3) உடன்படிக்கைப் பெட்டியைப் பற்றிய கடைசியான குறிப்பானது பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. பேழையைப் பற்றிய புதிய ஏற்பாட்டின் மறைமுகக் குறிப்பிடுதலானது (எபி. 9:4), அதன் எழுத்தாளர் பேழையைப் பற்றி அறிந்திருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டு கின்றது. பரலோகத்தில் தேவனுடைய ஆலயத்தில் இதைக் கண்டவரான (வெளி. 11:19) யோவானால் இது கடைசி முறையாகக் குறிப்பிடப்பட்டது.*

*பத்து கட்டளைகளைக் குறிப்பிடுகையில் யாத்திராகமம், லேவி யராகமம் மற்றும் எண்ணாகமம் ஆகிய புத்தகங்களில் "உடன்படிக்கை" மற்றும் "சாட்சியம்" என்ற இரு வார்த்தைகளும் பயன்படுத்தப்பட்டிருக்க, உபாகமத்தில் "சாட்சியம்" என்ற வார்த்தையின்றி, "உடன்படிக்கை" என்ற வார்த்தை மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற உண்மையானது ஆர்வம் மிக்க ஆனால் சிறிதளவே முக்கியத்துவம் வாய்ந்த கருத்தா யிருக்கலாம்.*

## இந்த உடன்படிக்கையின் இயல்பு

*தேவன் இஸ்ரவேலருடன் ஏற்படுத்திய உடன்படிக்கை குறித்து முக்கிய உண்மைகள் காணக் கிடைத்துள்ளன:*

*(1) தேவன் இந்த உடன்படிக்கையை ஏற்படுத்தினார். இது தேவன் இஸ்ரவேலர் மேல் நிர்ப்பந்தித்த ஒரு உடன்படிக்கையாய் இருந்தது,*

அவர்கள் (வலுக்) குறைந்த குழுவாயிருந்தனர். தேவன் தாம் கொடுத்த வசனங்களை எழுதும்படி மோசேக்குக் கூறினார், ஏனென்றால் இந்த வசனங்களின்படியாகவே அவர் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார் (யாத். 34:27). மோசே, "நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஓரேபிலே நம்மோடே உடன்படிக்கை பண்ணினார்" (உபா. 5:2) என்று கூறினார்.

(2) இந்த உடன்படிக்கையானது தேவனுக்கும் இஸ்ரவேலருக்கும் இடையில் இருந்தது. தேவனும் இஸ்ரவேல் மக்களும் மட்டுமே இந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டதாக உரைக்கப்படுகின்றனர் (யாத். 34:27; உபா. 5:1, 2; 1 இரா. 8:9, 21). உடன்படிக்கையானது இஸ்ரவேலரின் முன்னோர்களுடனோ அல்லது வேறு இனத்தவருடனோ ஏற்படுத்தப்பட்டிருந்ததில்லை. மோசே, "அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார்" (உபா. 5:3) என்று உரைத்தார். உடன்படிக்கையானது இஸ்ரவேல் மக்களை மட்டுமே உள்ளடக்கிய ஒரு தொடர்ச்சியான உடன்படிக்கையாய் இருக்க வேண்டியிருந்தது.

(3) இந்த உடன்படிக்கையானது பத்துக் கட்டளைகளைத் தனது இருதயம் போன்ற மையப் பகுதியாகக் கொண்டிருந்தது. யாத். 34:28ஆ வசனப் பகுதியானது, "அவன் பத்துக் கற்பனைகளாகிய உடன்படிக்கையின் வார்த்தைகளைப் பலகையில் எழுதினான்" என்று கூறுகின்றது. நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டிற்குள் செல்ல யோர்தானைக் கடப்பதற்குச் சற்று முன்பாக மோசே, "நீங்கள் கைக்கொள்ளவேண்டும் என்று அவர் உங்களுக்குக் கட்டளையிட்ட பத்துக் கற்பனைகளாகிய தம்முடைய உடன்படிக்கையை அவர் உங்களுக்கு அறிவித்து, அவைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதினார்" என்று உரைத்தார் (உபா. 4:13; 10:1-4ஐயும் காணவும்).

"பத்துக் கட்டளைகள்" என்ற சொற்றொடரில் "கட்டளைகள்" என்ற பதமானது "வார்த்தை" அல்லது "கூற்று" என்று அர்த்தப்படுகின்ற *dabar* என்ற எபிரெய வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது. King James வேதாகமப் பதிப்பில் இந்தப் பெயர்ச் சொல்லானது 770 முறைகள் "வார்த்தை" என்றும், ஆனால் 20 முறைகள் மாத்திரமே "கட்டளை" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "கட்டளை" என்று மிகப் பெரும்பாலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள *mitsvah* என்ற எபிரெய வார்த்தையானது பத்துக் கட்டளையைக் குறிப்பிட ஒருக்காலும் பயன்படுத்தப்பட்டதில்லை. புதிய ஏற்பாடானது "கட்டளை" என்று சீரான அர்த்தம் தருகின்ற *entole* என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றது. இந்தப் பத்துக் கூற்றுகளும் வெறும் நல்ல கருத்துக்கள் மாத்திரமே என்று எண்ணப்படக் கூடாதிருந்தது. மாறாக, அவைகள் கூறப்பட்ட வழிமுறையில் இருந்தே அவைகள் தேவனுடைய வார்த்தைகளாக, அவருடைய கட்டளைகளாகக் கருதப்பட வேண்டியவைகளாயிருந்தன.

(4) மோசே இந்த உடன்படிக்கையின் மத்தியஸ்தராய் இருந்தார். உடன்படிக்கையைக் கொடுத்தல் பற்றி விவரிக்கையில், மோசே, "கர்த்தர் மலையிலே அக்கினியின் நடுவிலிருந்து முகமுகமாய் உங்களோடே

பேசினார். கர்த்தருடைய வார்த்தையை உங்களுக்கு அறிவிக்கும்படி, அக்காலத்திலே நான் கர்த்தருக்கும் உங்களுக்கும் நடுவாக நின்றேன்; நீங்கள் அக்கினிக்குப் பயந்து மலையில் ஏறாமல் நின்றீர்கள்" (உபா. 5:4, 5) என்று கூறினார். இந்தக் கூற்றைத் தொடர்ந்து மோசே பத்துக் கட்டளைகளை இஸ்ரவேலருக்குக் கொடுத்தார் (உபா. 5:6-21).

*(5) இந்த உடன்படிக்கையானது சீனாய் மலையில் அல்லது ஓரேப் மலையில் கொடுக்கப்பட்டது.* இந்த உடன்படிக்கை கொடுக்கப் படுவதற்குச் சற்று முன்பு மோசே இஸ்ரவேல் மக்களை சீனாய் மலையின் அடிவாரத்திற்குக் கொண்டு வந்து சேர்த்திருந்தார் (யாத். 19:17, 18). சீனாய் மலையின்மீது ஏறி, தேவனிடமிருந்து உடன்படிக்கையைப் பெற்ற பின்பு அதை இஸ்ரவேலரிடம் கொடுப்பதற்காக மோசே கீழே இறங்கி வந்தார் (யாத். 19:23-20:17). தேவன் ஓரேப் மலையிலே அவர்களோடே ஒரு உடன் படிக்கையை ஏற்படுத்தியதாக அவர் தகவல் அறிவித்தார்; பின்பு அவர் பத்துக் கட்டளைகளை மீண்டும் அவர்களுக்கு எடுத்துரைத்தார் (உபா. 5:2-21).

*(6) உடன்படிக்கையின் அடிப்படைப் பதிவானது உடன்படிக்கைப் பேழையில் வைக்கப்பட்ட இரண்டு கற்பலகைகளில் எழுதப்பட்டிருந்தது.* பத்துக் கட்டளைகளின் வார்த்தைகள் கற்பலகைகளின் இருபுறமும் (யாத். 32:15, 16) "தேவனுடைய விரலினால் எழுதப்பட்டன (செதுக்கப்பட்டன)" (யாத். 31:18; உபா. 9:10). அவைகள் இரு பலகைகளில் எழுதப்பட்டன என்ற உண்மையானது யாத். 34:1 மற்றும் உபா. 5:22; 9:10; 10:3, 4 ஆகிய வசனங்களில் மீண்டும் கூறப்பட்டது.

உண்மையில், மோசே மலையிலிருந்து திரும்பி வந்த பொழுது, இஸ்ரவேலர் பொல்லாங்கான செயலில் ஈடுபட்டிருந்ததைக் கண்டு (யாத். 32:19; உபா. 9:16, 17) அந்த முதற் கற்பலகைகளை உடைத்தார். இரண்டாம் முறையாக மலையில் மோசே ஏறுவதற்கு முன்பு தேவன் அவரிடத்தில் சீத்திம் மரத்தினால் ஒரு பேழையைச் செய்யும்படி கூறினார் (பேழைக்கான குறிப்புகள் யாத். 25:10-22ல் தரப்படுகின்றன; பேழையைக் கட்டியெழுப்பியது யாத். 37:1-9ல் பதிவு செய்யப்பட்டுள்ளது). மோசே புதிய கற்பலகைகளைப் பெற்ற பிறகு (யாத். 34:28ஆ) மலையிலிருந்து கீழே இறங்கி வந்து அவற்றைப் பேழையில் வைத்தார் (உபா. 10:1-5). சாலொமோனின் நாட்களில் இந்தக் கற்பலகைகள் பேழையினுள்ளேயே அப்பொழுதும் இருந்தன (1 இரா. 8:9, 21).

*(7) இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்பட்டு வந்த பிறகு தேவன் இந்த உடன்படிக்கையை அவர்களுடன் ஏற்படுத்தினார்* (1 இரா. 8:9, 12). இது ஆதாம், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு அல்லது யாக்கோபு ஆகியோருடனோ, அவர்களின் உடனடி சந்ததியினருடனோ (உபா. 5:1-4), அல்லது பூமியின் வேறு எந்த மக்களுடனோ ஏற்படுத்தப்பட்டிருந்ததில்லை. இந்த உடன்படிக்கையானது இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து கிளம்பும் வரை நடைபெற்றிராத நிகழ்வான அவர்கள் ஒரு நாடாகும் முன்பு அவர்களுடன் ஏற்படுத்தப்படக் கூடாததாக இருந்தது. அவர்கள் ஒரு குடும்பமாய் இருப்பதிலிருந்து வளர்ச்சியுற்று அலைந்து திரியும் ஒரு

இனமாக, எகிப்தில் அடிமை மக்களாய் இருப்பதில் இருந்து முழு வளர்ச்சியுற்ற ஒரு நாடாக வளர்ந்திருந்தனர்.

*(8) இந்த உடன்படிக்கையானது கட்டுப்படுத்தும் ஒரு கருத்து ஒருமைப்பாடாக அல்லது உடன்படிக்கையாக அல்லது ஒப்பந்தமாக, இரத்தத்தினால் உறுதி செய்யப்பட்டதாயிருந்தது.* புதிய உடன்படிக்கை யானது அதை ஏற்படுத்தியவரின் மரணத்தினால் அர்ப்பணிக்கப்பட்டு அமலாக்கப்படுகிறது என்று கூறிய பின்பு (எபி. 9:16, 17), எபிரெய ஆசிரியர் பின்வருமாறு கூறினார்:

> அந்தப்படி, முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டை பண்ணப்படவில்லை. எப்படியெனில், மோசே, நியாயப்பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்ன பின்பு, இளங்காளை வெள்ளாட் டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டுமயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின்மேலும் ஜனங்களெல்லார் மேலும் தெளித்து: தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான் (எபி. 9:18-20).

வாலிபர்கள் மிருக பலிகளைச் செலுத்திய பிறகு உடன்படிக்கையின் அர்ப்பணிப்பு நடந்தேறியது. "அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங் குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்" (யாத். 24:8).

உடன்படிக்கையானது உறுதிப்படுத்தப்பட்ட பிறகு, அத்துடன் எதுவும் கூட்டப்படவோ அல்லது அது மாற்றியமைக்கப்படவோ கூடாதிருந்தது. உடன்படிக்கையின் மாற்றப்பட முடியாத இயல்பைப் பற்றிப் பவுல் சுட்டிக் காட்டினார்: "சகோதரரே, மனுஷர் முறைமையின்படி சொல்லுகிறேன்; மனுஷர்களுக்குள்ளே உறுதி பண்ணப்பட்ட உடன்படிக்கையை ஒருவனும் தள்ளுகிறதுமில்லை, அதினோடே ஒன்றையுங் கூட்டுகிறது மில்லை'' (கலா. 3:15). தேவன் இஸ்ரவேலர்களுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையானது ஒருமுறை அர்ப்பணிக்கப்பட்ட பிறகு அத்துடன் வேறே எந்த நிபந்தனைகளையும் கூட்ட முடியாதிருந்தது மற்றும் அந்த உடன்படிக்கையில் வேறு எந்த மக்களையும் உள்ளடக்க முடியாதிருந்தது என்றே முடிவெடுக்க வேண்டியதாக உள்ளது. அது வேறு எந்த மக்களையும் உள்ளடக்காமல், தேவனையும் இஸ்ரவேலர்களையும் மட்டுமே உள்ளடக்கிய திட்டவட்டமான நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்தமாய் இருந்தது.

*(9) இஸ்ரவேலர்கள் உடன்படிக்கையைக் காத்துக் கொண்டால் குறிப்பிட்ட ஆசீர்வாதங்கள் கொடுக்கப்படும்.* தேவன் அவர்களிடத்தில், ''இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்கள் எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது.

நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்" (யாத். 19:5, 6அ) என்று உரைத்தார்.

பத்துக் கட்டளைகளைக் கொடுத்த பிறகு, மோசே இஸ்ரவேலரிடத்தில், "நீங்கள் சுதந்தரிக்கும் தேசத்திலே பிழைத்துச் சுகித்து நீடித்திருக்கும்படி உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழிகளெல்லாவற்றிலும் நடக்கக் கடவீர்கள்" (உபா. 5:33).

இந்த வசனப் பகுதிகளில் இருந்து நாம், இஸ்ரவேலர் தேவனுடைய உடன்படிக்கையைக் காத்துக்கொண்டால் அவர்களை அவர் தம்முடைய விசேஷித்த இராஜ்யமாக்குவார் என்று அறிகின்றோம். இது, அவர்களுக்கு அவர் நாட்டில் செழுமையுடன் நீடிய ஆயுளையும் கொடுப்பார் என்று அர்த்தப்படும். நாடானது ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையில் வாக்களிக்கப்பட்டிருப்பினும், தேவன் இஸ்ரவேலரோடு ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையைக் காத்துக் கொண்டால் மட்டுமே அது (நாடு) தொடர்ந்து அவர்களுடையதாயிருக்கும்.

இந்த உடன்படிக்கையில் தேவன், மரணத்திற்குப் பின் வாழ்வு, நித்திய ஜீவன் அல்லது பரலோகத்தில் தேவனுடன் வாழுதல் போன்ற எந்த ஆசீர்வாதத்தையும் உள்ளடக்கவில்லை. உடன்படிக்கையின் நிபந்தனைகள் தற்காலிகமான, பூமிக்குரிய ஆசீர்வாதங்களை மட்டுமே உள்ளடக்கியிருந்தது. அந்த உடன்படிக்கையைக் காத்துக் கொண்டவர்களுக்கு நாட்டின் செழுமையுடன், பூமியில் நீடிய ஆயுளும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது.

*(10) உடன்படிக்கையை மீறுதலானது குறிப்பிட்ட சாபங்களை விளைவிக்கும்.* எளிதாக எடுத்துரைப்பதென்றால், இஸ்ரவேலர்கள் அவருடைய உடன்படிக்கைக்குக் கீழ்ப்படியாதிருந்தால், தேவன் அந்த உடன்படிக்கையில் உள்ளடக்கியிருந்த ஆசீர்வாதங்களை நிறுத்தி வைத்து, இஸ்ரவேலர்கள்மீது இடர்ப்பாடுகளையும் அழிவுகளையும் கொண்டு வருவார். பிற்பாடு இஸ்ரவேலர்கள் - அடிமைத்தனம் மற்றும் நாட்டை விட்டு வெளியேறுதல் உட்பட - பெற்றுக் கொண்ட சிரமங்கள் யாவும் அவர்கள் உடன்படிக்கையை முறித்ததினால் வந்தன.

லேவியராகமம் 26ல் இஸ்ரவேலர்களுக்குப் பின்வருமாறு கூறினார்:

> நீங்கள் எனக்குச் செவிகொடாமலும், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமலும், என் கட்டளைகளை வெறுத்து, உங்கள் ஆத்துமா என் நியாயங்களை அரோசித்து, என் கற்பனை எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு, என் உடன்படிக்கையை நீங்கள் மீறிப்போடுவீர்களாகில்: நான் உங்களுக்குச் செய்வது என்னவென்றால் ... (வ. 14-16அ).

பின்பு தேவன் அவர்களைப் பல வகையான சிரமங்களினால் தாம் தாக்குவதாகவும் - மற்றும் இது அவர்கள் மாறுவதற்கு ஏதுவாக இல்லையென்றால், அவர்களை அவர் ஏழு தரம் அதிகமாகத் தண்டிப்பதாகவும் கூறினார் (வ. 18). இதைத் தொடர்ந்து, அவர்கள் பாவம் செய்வதில்

நிலைத்திருந்தால் அவர் மீண்டும் மீண்டும் ஏழத்தனையாகத் தண்டிப்பதைப் பெருகச் செய்வார் (வ. 21, 24, 28). இப்படிப்பட்ட தண்டனைக்கான தம்முடைய காரணத்தை அவர் எடுத்துரைத்தார்: "என் உடன்படிக்கையை மீறினதற்குப் பழி வாங்கும் பட்டயத்தை நான் உங்கள்மேல் வரப்பண்ணி" (வ. 25).

தேவன் அவர்களுக்குத் திடீர்ப் பயங்கரம், அழிவு மற்றும் காய்ச்சல், அவர்களின் விரோதிகளால் கொள்ளையிடப்பட்டு, ஆதிக்கம் செலுத்தப் படுதல், பஞ்சம், வாதை மற்றும் பிற பயங்கரங்களைக் கொடுத்திருந்த பின்னரும் அவர்கள் மனந்திரும்பாதிருந்தால், அவர் உடன்படிக்கையின் தம்முடைய பகுதியை முற்றிலுமாகக் கவனியாது விட்டு விடுவார். ‘‘ஜாதிகளுக்குள்ளே உங்களைச் சிதற அடித்து, உங்கள் பின்னாகப் பட்டயத்தை உருவுவேன்; உங்கள் தேசம் பாழும், உங்கள் பட்டணங்கள் வனாந்தரமுமாகும்’’ (வ. 33).

## முடிவுரை

இஸ்ரவேலருடனான ஒரு உடன்படிக்கையில் தேவன் தம்மை அவர்கள் தேவன் என்று கட்டுப்பாடு செய்து, அவர்கள் செல்லவிருந்த நாடான கானானில் செழுமையுடன் நீண்ட ஆயுளையும் தருவதாகவும் உறுதியளித்தார். இந்த உடன்படிக்கையானது இஸ்ரவேலர்களை மட்டுமே உள்ளடக்கிற்று. மக்கள் உடன்படிக்கையைக் காத்துக் கொண்டால், அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிப்பார்கள்; ஆனால் அவர்கள் அதை முறித்தால், அவர்களை அவர் தண்டிப்பார்.